Test Booklet No.
परीक्षा पुस्तिका संख्या

296154

This booklet contains 20 pages.
इस पुस्तिका में 20 पृष्ठ हैं ।

# JBC – 12A

**PAPER II / प्रश्न-पत्र II**
**PART IV & V / भाग IV & V**
**Tamil Language Supplement**
**तमिल भाषा परिशिष्ट**

Test Booklet Code
परीक्षा पुस्तिका संकेत

**X**

**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**

**For instructions in Tamil see Page 2 of this booklet. / तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें ।**

SEAL

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Blue / Black Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **X**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part IV : Language I – (Tamil) *(Q. 91 to Q. 120)*
   Part V : Language II – (Tamil) *(Q. 121 to Q. 150)*
7. Part IV contains 30 questions for Language I and Part V contains 30 questions for Language II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language I and/or Language II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part V (Language II) in a language other than the one chosen as Language I (in Part IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

## *परीक्षार्थियों के लिए निर्देश*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल नीले/काले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **X**. यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य प्रश्न पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग IV : भाषा I — (तमिल) *(प्र. 91 से प्र. 120)*
   भाग V : भाषा II — (तमिल) *(प्र. 121 से प्र. 150)*
7. भाग IV में भाषा I के लिए 30 प्रश्न और भाग V में भाषा II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा I और/या भाषा II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिएँ ।**
8. **परीक्षार्थी भाग V (भाषा II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

Name of the Candidate (in Capitals) : ______________________
परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में ) :
Roll Number (अनुक्रमांक) : in figures (अंकों में) ______________________
: in words (शब्दों में) ______________________
Centre of Examination (in Capitals) : ______________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में ) :
Candidate's Signature : ______________ Invigilator's Signature : ______________
परीक्षार्थी के हस्ताक्षर : निरीक्षक के हस्ताक्षर :
Facsimile signature stamp of Centre Superintendent ______________________

இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது.

# JBC – 12A

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**X**

## தாள் II

## பகுதி IV & V

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

***தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டுதல் குறிப்புகள்***

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது, **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I & பகுதி II **அல்லது** III க்கும், அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/கறுப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **X** ஆகும். இந் நூற்கட்டின் மீதும், இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும், உம் தேர்வு நூற்கட்டு எண்ணும், விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால், தேர்வு எழுதுபவர் இதுபற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும், வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இத் தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல்விடை வினாக்கள் கொண்ட இப் பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.
   பகுதி IV : மொழி I — (தமிழ்) *(வினாக்கள் 91 முதல் 120 வரை)*
   பகுதி V : மொழி II — (தமிழ்) *(வினாக்கள் 121 முதல் 150 வரை)*
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம்பெற வேண்டும்.
10. ஒஎம்ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடைகளைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன் படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ______________________

: எழுத்தில் ______________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ______________________

Facsimile signature stamp of Centre Superintendent ______________________

**தமிழை மொழிப்பாடம் I** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி IV
# மொழிப்பாடம் I
# தமிழ்

*குறிப்பு : கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து எழுதுக.*

**91.** பின்வருனவற்றுள் இருதிணைப் பொதுப்பெயர் எது ?

(1) யாவை

(2) ஓதுவார்

(3) யாம்

(4) பிறன்

**92.** "வெல்லம் உள்ளதா ?" என வாடிக்கையாளர் வணிகரிடம் கேட்கும் வினா

(1) ஏவல் வினா

(2) கொளல் வினா

(3) காலவினா

(4) கொடை வினா

**93.** யாம் முன்பு விளையாடுவது இச்சோலை என்ற தொடரில் காணப்படும் வழுவமைதி

(1) இட வழுவமைதி

(2) திணை வழுவமைதி

(3) கால வழுவமைதி

(4) பால் வழுவமைதி

**94.** "இளமதி நடைப்பயிற்சிக்கு வரவில்லையா ?" என்ற வினாவிற்கு "குளியலறையில் வழுக்கி விழுந்து விட்டேன்" என்று விடையளித்தல் _____ என்ற விடை வகையின் பாற் படும்.

(1) சுட்டு

(2) உற்றது உரைத்தல்

(3) மறை

(4) இனமொழி

**95.** பின்வரும் தொடர்களுள் பேசுபவருடன் முன்னிலை இடத்தாரையும் படர்க்கை இடத்தாரையும் உள்ளடக்கியது எது ?

(1) நாம் போகிறோம்

(2) நாங்கள் போகிறோம்

(3) யாம் போகிறோம்

(4) யானும் நீயும் போகிறோம்

**96.** வேற்றுமை உருவுகளை கற்கும்போது ஒருவர் கவனம் செலுத்து வேண்டியது, அவறின் _______ .

(1) பயன்பாட்டில்

(2) இலக்கண விளக்கங்களில்

(3) வரிசைமுறையில்

(4) எண்ணிக்கையில்

**97.** "அஞ்சலாள் அஞ்சல் உறைகளை காலை 11 மணிக்கு உரியவாகளிடம் ஒப்படைத்தார்."
"அஞ்சல் உறைகள் அஞ்சலாளால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன"
என்ற இருவாக்கியங்களை வேறுபடுத்திக் காட்ட மாணவர்கனின் கவனத்தை எதன்மிது ஈர்ககலாம்.

(1) சொற்களின் வைப்பு முறையல் உள்ள வேறுபாடு

(2) எழுவாய், செயர்படுபொருள் ஆகியவற்றின் பங்கு

(3) வினைச்சொல் வடிவத்தில் உள்ள மாற்றம்

(4) 'ஆல்' என்ற வேற்றுமை உருபின் பயன்பாடு

**98.** கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எந்த இணை அறிவுப்புலப்பாணி (cognitive style) வகைகளை உள்ளடக்கியது ?

(1) செயல்திற முடைய / செயல்திறமற்ற

(2) முழுமைசார்ந்த / பகுப்பாய்வு சார்ந்த

(3) விளக்கமுறை சார்ந்த / நேர்ச் சொற்பொருள் சார்ந்த

(4) உணர்ச்சிமயமான / உணரக்கூடிய

**99.** மொழி கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டில் கோப்புறை (Portfolio) என்பது எதைக் குறிக்கிறது ?

(1) பருவந்தோறும் நடத்தப்பெறும் வாய் மொழித் தேர்வு

(2) மாணவனின் தேர்ச்சியைக்காட்டும் ஒரு குறிப்பட்ட காலத்தில் கற்போர் செய்த வேலைகளின் தொகுப்பு

(3) ஆசிரியரால் பராமரிக்கப்படும், ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய மாணவர்களின் நடத்தை பற்றிய பதிவேடு

(4) பருவமுறையிலான எழுதுகோல் - தாள் தேர்வு

**100.** படித்தல் செயல் குழுஉக் குறிகளை மறைவிடுவித்து எழுதுதல் (Decoding) என்பதன் பொருள்

(1) சிக்கலான புதிரை விடுவித்தல்

(2) பகுப்பாய்வு செய்து புரிந்து கொள்ளுதல்

(3) அந்நியமொழியைப் புரிந்து கொள்ளுதல்

(4) தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தில் (ICT) பயன் படுத்தப்படும் ஒரு செயல்

**101.** *முதலாமவர் :* முதலாளி அலுவலகம் திரும்பிவிட்டாரா ? இல்லையா ?

*இரண்டாமவர் :* ஆம்

மாணவர்களின் பேசுதல் - கேட்டல் திறனை மதிப்பீடு செய்கையில் மேற்காண் உரையாடலில் ஈடுபட்டவரில் எவருக்கு மதிப்பெண் குறைக்கலாம்.

(1) முதலாமவர்

(2) இரண்டாமவர்

(3) இருவருக்கும்

(4) ஒருவருக்கும் குறைக்க வேண்டாம்

**102.** எழுதும்போது ஒட்டிணைவு உத்தியாக (Cohesive device) பயன்படுவது ______ ஆகும்.

(1) சொல்லெச்சம் (Ellipsis)

(2) பெயரடை (Adjective)

(3) முன்வைப்பு (Preposition)

(4) சொற்றொடர் (Phrase)

**103.** படர்க்கையில், சுருக்கமாக இடையில் தேவையற்ற செய்திகள் எவையுமின்றி, மிகை உணர்ச்சியில்லாமல் ஏரணமுறையில் (logically) ஒழுங்குபடுத்தப்பட்ட வாக்கியங்கள் கொண்டு எழுதப்பட்டுள்ள ஒன்று ______ எனப்படும்.

(1) பொதுநிலை அறிக்கை (Memorandum)

(2) அறிக்கை (Report)

(3) செய்தித்தாள் கட்டுரை

(4) வகைப்படுத்தப்பட்ட விளம்பரம்

**104.** சூரிய கிரகணம் எப்போது ? என்ற வினாத்தொடர் அமைந்துள்ள காலம் ____

(1) நிகழ்காலம்

(2) எதிர்காலம்

(3) தொடர் நிகழ்காலம்

(4) இறந்த காலம்

**105.** தேசிய கல்வி ஏற்பாட்டுச் சட்டகம் (NCF) 2005 3.1.4 ன் படி பள்ளிகளில் படித்தல் எழுதுதல் திறன்களில் சிறப்புக்கவனம் செலுத்தப் படவேண்டும்; அதிலும் குறிப்பாக ______ பாடத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

(1) தாய்மொழி

(2) இந்தி

(3) பிற அந்நியமொழி

(4) ஆங்கிலமொழி

***குறிப்பு** : கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியை நன்கு படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் (வினா எண் 106 – 114) தக்க விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

வெறும் அபிப்பிராயத்திற்கும் விமரிசனத்திற்கும் வேறுபாடு உண்டு. வெறும் அபிப்பிராயம் என்பது பொறுப் பற்ற முறையில் வெளிப்படுத்தப்படும் ஒரு மனப்பதிவு. விமரிசனம் ஒரு கலை; விமரிசனம் ஓர் அறிவியல்; விமரிசனம் ஒரு தருக்க ரீதியான தீர்ப்பு. இதில் வெறும் அனுமானங்களுக்கும் அர்த்தமற்ற பாராட்டுகளுக்கும் இடம் இல்லை. போற்றலிலும் சரி, தூற்றலிலும் சரி, தகுந்த காரணங்களைக் காட்ட வேண்டும்.

மற்றொன்றையும் உணர வேண்டும்; 'நூல் மதிப்புரை' செய்வது வேறு; திறனாய்வுக் கட்டுரை எழுதுவது என்பது வேறு. தமிழ்நாட்டில் எல்லாமே ஒன்றாகத்தான் கருதப் படுகிறது. பத்திரிகைக்காரர்கள் விதிக்கும் இடக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுச் செய்யப்படும் சிறு அறிமுகமே 'நூல் மதிப்புரை'. விமரிசனம் என்பதோ தரத்திலும் அளவிலும் பரிணாமத்திலும் அதனினும் வேறானது. இரண்டையும் ஒன்றாகக் கருதிக் குழம்புதல் கூடா.

விமரிசனக் கட்டுரை எழுதும்போது நான் மொழி நடையைப்பற்றி மிகுதியும் கவலைப்படுகிறேன். எடுத்துக் கொள்ளும் நூல் பொருளுக்கு ஏற்ப மொழிநடை மாறவே செய்யும். புனைகதையின் மொழிநடையும், திறனாய்வின் மொழி நடையும், சாதாரணக் கட்டுரையின் மொழி நடையும் வெவ்வேறானவை; வெவ்வேறாகத்தான் இருக்க வேண்டும். புனைகதை மொழிநடையில் வண்ணமும் புலன் நுகர் இன்பமும் முக்கியம்; திறனாய்வு மொழி நடையில் திட்பமும் நுட்பமும் அவசியம். சிலர் என் நடை சற்றே கரடு கரடாய் இருப்பதாகக் குற்றம் கூறுவர். நான் 'கடுமையான நடையில் எழுத வேண்டும்' என்ற நோக்கோடு எழுதுவதில்லை. நான் நினைக்கிற கருத்துக்களைச் சில சொற்கள் வெளிப்படுத்த முடியாமல் திணறுகிற போது, அவற்றை அடித்து வளைத்துப் புதுச் சொற்களாக மாற்றுகிறேன்; சில பழஞ் சொற்களைப் புதிய பொருளில் பிரயோகிக்கிறேன். தொடர் அமைப்பிலும் வாக்கிய அமைப்பிலும் செறிவை முதன்மைப் படுத்துகிறேன். விமரிசனத்தை ஓர் அறிவியல் என்று கருதுவதால் திட்ப நுட்பத்தை என் மொழி நடையில் கொண்டுவர முயல்கிறேன். இதன் காரணமாகச் சில வேளைகளில் என் நடை கடுமைபோல் தோன்றலாம். எதிர்காலத்தில் 'தத்துவத் தமிழ்', 'அறிவியல் தமிழ்' என்பன போல் 'திறனாய்வுத் தமிழ்', என்ற ஒன்று

உருவாகும் என்பது என் நம்பிக்கை; உருவாக வேண்டும் என்பது என் ஆசை. அதுவரை திறனாய்வுத் தமிழ் தமிழாசிரியன்மார்களின் ஒப்புதலையும், பத்திரிகை உலக ஜாம்பவான்களின் ஆதரவையும் பெறாமலே கூடப் போகலாம்.

**106.** கீழே தரப்பட்டுள்ளவற்றுள் ______ மிகவும் திட்பநுட்பம் தேவைப்படுவதாகும்.

(1) பாராட்டுரை

(2) நூல்மதிப்பரை

(3) விமரிசனம்

(4) அபிப்பிராயம்

**107.** கட்டுரையாளர் எவற்றை ஒன்றென எண்ணி மயங்குதல் வேண்டாம் என்கிறார் ?

(1) பாராட்டுரை, நூல்மதிப்புரை

(2) திறனாய்வு, அனுமானம்

(3) விமரிசனம், நூல்மதிப்புரை

(4) விமரிசனம், அபிப்பிராயம்

**108.** 'திட்ப நுட்பம்' என்று கட்டுரையாளர் குறிப்பிடுவதன் பொருள்

(1) நம்பகத்தன்மை

(2) ஏற்புடைமை

(3) வழுவாமை

(4) இடக்கட்டுப்பாடு

**109.** 'அதனினும் வேறானது' என்ற தொடரில் பயின்று வரும் வேற்றுமை உருபு எப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது

(1) நீங்கற்பொருள்

(2) ஏதுப்பொருள்

(3) எல்லைப் பொருள்

(4) ஒப்புப்பொருள்

**110.** 'மாற்றுகிறேன்', 'உணர' என்ற இருசொற்களையும் முறையே ______ என வகைப்படுத்தலாம்.

(1) முற்றுவினை, பெயரெச்சவினை

(2) முற்றுவினை, வினையெச்சவினை

(3) வினையெச்சவினை, பெயரெச்சவினை

(4) வினையெச்ச வினை, முற்று வினை

**111.** கட்டுரையாளர் எவ்விரு சொற்களை ஒத்த பொருளில் கையாள்கிறார்

(1) விமரிசனம், புனைகதை

(2) விமரிசனம், திறனாய்வு

(3) திறனாய்பு, அநுமானம்

(4) நுல் மதிப்புரை, விமரிசனம்

**112.** இக்கட்டுரையின் வாயிலாக கட்டுரை ஆசியர் வற்புறுத்த விரும்பும் கருத்து

(1) திறனாய்வுக் கட்டுமையில் திட்ப நுட்பம் இன்றியமையாதது

(2) விமரிசனம் எழுதுவோர் எதனையும் சுருக்கமாகக் கூறுதல் வேண்டும்.

(3) விமர்சனங்களில் அர்த்தமற்ற பாராட்டுகள் தவிர்க்க முடியாதவை

(4) விமரிசனம் எழுதுவோர் பிறர் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு உடன்பட வேண்டும்

**113.** இக்கட்டுரையாளரின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

(1) நூல்மதிப்புரைகள் கடுமையான நடையில் எழுதப்படுதல்

(2) விமரிசனத்தில் வண்ணமும் புலன்நுகர் இன்பம் இடம் பெறல்

(3) விமரிசனங்கள் அனுமானங்களுக்கும், பாராட்டுரைகளுக்கும் இடமளித்தல்

(4) எதிர்காலத்தில் 'திறனாய்புத் தமிழ்' என்ற ஒன்று உருவாதல்

**114.** கட்டுரையாளரின் மொழிநடை விமரிசனக் கட்டுரைகளில் கரடுமுரடாக இருக்க காரணம்

(1) தமிழாசிரியன்மார்களின் ஒப்புதல் இன்மை

(2) பத்திரிகையாளர்கள் விதிக்கும் இடக்கட்டுப்பாடு

(3) விரும்பும் கருத்துகளை துல்லியமாக வெளிப்படுத்த உரிய சொற்கள் கிடைக்காமை

(4) தமிழர் நூல்மதிப்புரை, விமரிசனம் இரண்டும் ஒன்றெனக் கருதுதல்

**குறிப்பு** : *கீழே உள்ள கவிதையைப் படித்து, பின்னர் உள்ள வினாக்களுக்குப் (வினா எண் 115 – 120) பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்க.*

கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே யிழந்திடுதல் குற்றமென்றாய்
சினமான தீயறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து
சொன்னாய்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்,
தருமமறு படிவெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம்.
இன்று
கட்டுண்டோம், பொறுத்திருபபோம்;
கால மாறு
தருமத்தை யப்போது வெல்லக்
காண்போம்.
தனுவுண்டு காண்டீவ மதன்பேர்
என்றான்

**115.** 'சினமான தீயறிவைப் புகைத்தலாலே' என்ற அடியில் உவமானம் உவமேயம் ஆகியவை முறையே

(1) தீ, அறிவு

(2) தீ, சினம்

(3) சினம், தீ

(4) அறிவு, தீ

**116.** 'இயற்கை மருமம்' எனக் குறிப்பிடப்படுவது

(1) சூதில் களித்தல் குற்றமெனும் கருத்து மறைதல்

(2) தன்னையிழந்தவன் தன்மனைவியை சூதில் தோற்றல்

(3) அறம் தோற்பது போலத் தோன்றினாலும் இறுதியில் அது வெல்லும் எனல்

(4) சூதில் தோற்பவர் பின் வெல்வார் எனல்

**117.** 'சினந்து சொன்னாய்' என்ற தொடரில் 'சினந்து' என்ற சொல்

(1) குறிப்புவினை

(2) வினையெச்சம்

(3) வினை முற்று

(4) பெயரெச்சம்

**118.** பாஞ்சாலி சபதத்தை ஒரு உருவகக் கதை (all egorical story) எனக்கொண்டால் 'திரௌபதை' பாத்திரம் குறிப்பது

(1) அன்னிபெசன்ட்

(2) இந்திய நாடு

(3) அறப்போர்

(4) விடுதலை

**119.** 'நம்மாலே யுலகங்கற்கும்' என அர்ஜுனன் குறிப்பிடும் உண்மை யாது

(1) சினம் கொள்ளுதல் தன்னையே அழிக்கும்

(2) வில்லும் காண்டீபமும் போரில் வெல்ல இன்றியமையாதவை

(3) அறம் சூழ்ச்சித் திறத்தால் அடையும் தோல்வி தற்காலிகமானதே

(4) சினம் மிகக்கொண்டவர்கள் பிறரை அவமதிப்பர்

**120.** 'தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்' என்ற அடியால் பாரதியார் வெல்ல விழைவது எது ?

(1) இந்தியர்களின் வறுமை

(2) பெண்களின் விடுதலை

(3) அறியாமையிலிருந்து விடுதலை

(4) இந்திய நாட்டின் அரசியல் விடுதலை

**தமிழை மொழிப்பாடம் II** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி V
# மொழிப்பாடம் II
# தமிழ்

*குறிப்பு : கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து எழுதுக.*

**121.** உரையாடல் எழுதுதல் (Dialogue writing) மொழிப்பாடத்தில் சேர்க்கப்பட்டிருப்பதன் நோக்கம் _______ ஐ சோதித்தலே அகும்.

(1) இலக்கண வழுவாமை (Grammatical accuracy)

(2) கலந்துரையாடும் திறன் (Conversational skills)

(3) படைப்பாற்றல் (Creativity)

(4) சரளமாக எழுதுதல் (Writing Fluently)

**122.** கற்பிக்கப்பட்டது எல்லாம் கற்றது ஆகாது ஏனெனில்

(1) இயல்பான (informal) விவாதத்தின் போது மாணவர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள்

(2) ஒரு ஆசிரியரின் சமூகப் பொருளாதார நிலை மாணவர்களு டைய தினின்றும் பரவலாக வேறுபடும்

(3) மாணவர்கள் பல்வேறு இயலுமைகள் (abilities) மற்றும் ஆளுமைத்திறள்களுடன் வெவ்வேறான பின்னணியிலிருந்து வருகிறார்கள்

(4) ஆசிரியர் அல்லது கற்போர் எத்துறையிலும் ஒரு போதும் முழுமையான தேர்ச்சித்திறன் அடைய முடியாது

**123.** தலைப்பு வாக்கியம் (topic sentence) என்பது ஒரு _______ ன் முதன்மையான கருத்தைக் கொண்டதாக இருக்கும்.

(1) பேச்சு

(2) பத்தி

(3) உரையாடல்

(4) கட்டுரை

**124.** கட்டமைப்பியல் (constructivism) என்ற கோட்பாட்டின் படி மாணவர்கள்

(1) அனுபவங்கள் மற்றும் அனுபவங்களின் மீதான தற்சிந்தனை (reflection) ஆகியவற்றின் மூலம் இவ்வுலகம் பற்றிய தமது சொந்த அறிதலையும் புரிதலையும் உருவாக்கிக் கொள்ளுகிறார்கள்

(2) ஆசிரியர்களின் உதவியோடும் பல்வேறுபட்ட ஊடகங்களை பயன்படுத்தியும் ஆய்வு மேற்கொண்டு தங்களுடைய சொந்த கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ளுகிறார்கள்

(3) தங்களுக்குரிய கற்றல் துணைக்கருவிகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் நேரடி அனுபவம் பெறுகிறார்கள்

(4) பல்வேறுபட்ட ஒத்த தன்மையற்ற மாதிரிகளை ஆய்ந்து அவற்றின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருகிறார்கள்

**125.** ஒரு நிறுவனத்திற்குள்ளேயே கல்விவளங்களைப் பகிர்ந்துகொள்ள உதவும் தகவல் தொடர்பு தொழில் நுட்பம்

(1) INTRANET

(2) DELNET

(3) ERNET

(4) INTERNET

**126.** தோற்றநிலையான மெய்ம்மை (Virtual reality) என்பது

(1) காட்சிமாநாடு (Video conferencing)

(2) கணிணிமூலம் தோற்றுவிக்கப்படும் காட்கிப் படுத்தலுக்கான முன்னேற்றமான கருவி

(3) காட்சித்தகடு (Video disc)

(4) தொலை மாநாடு (teleconferencing)

**127.** சொல்லாக்க முறைகளில் பின் அடிச்சொல் ஆக்கத்திற்கான (back formation) எடுத்துக்காட்டு

(1) ஆண்பால் + பெண்பால் > இருபால்

(2) பயன் + அற்ற > பயனற்ற

(3) Kattumaram (Tamil) > Catamaran (English)

(4) கணியன் > கணி

**128.** இருசொல் கூட்டுச் சொற்களுக்கு எடுத்துக் காட்டு

(1) ஊத்துக்குளி வெண்ணெய் / ஒட்டு மாம்பழம்

(2) காற்றாலை / வரி செலுத்துவோர்

(3) எண்ணெய்க் கிணறு / தஞ்சாவூர்பொம்மை

(4) தலைவலி / மழைப்பாழிவு

**129.** மொழி ஈட்டம் (language acquisitions) என்பது

(1) சொற்களை மனனம் செய்வதுடன் இலக்கணத்தைப் பகுத்தாயவும் புரிந்துகொள்ளவும் முறையான அணுகு முறையை உள்ளடக்கியது

(2) மனித மூளையின் உள்ளார்ந்த தகைமையின் காரணமாக ஒருவர் தமது தாய்மொழி அல்லது இரண்டாம் மொழி கற்கும் செயல்முறை

(3) குழந்தைகள் தமது தாய் மொழியை கற்பதற்குரிய சூழலை பாவனையாக உருவாக்க (Stimulate) கையாளும் ஒரு உத்தி

(4) இன்றியமையாத சொற்களை மனனம் செய்து அவற்றைப்பயன் படுத்துதல்

**130.** தேசிய கல்வி ஏற்பாட்டுச்சட்டகம் (NCF), 2005 ன் படி ________ ஐக் கற்பித்தலின் நோக்கம் அருவமான (abstract) அறிவையும் சிந்தனையையும் எழுத்தறிவின் மூலம் ஈட்ட உதவும் ஒரு கருவியை அளித்தல் ஆகும்

(1) முதல்மொழி

(2) மூன்றாம் மொழி

(3) செம்மொழி

(4) இரண்டாம் மொழி

**131.** பின்வரும் இணைகளுள் நிகழ்காலம் உணர்த்தும் வினையெச்ச வாய்பாடைக் கொண்டது

(1) செய்பு / செய்யா

(2) செயின் / செய்யிய

(3) செய / செய்பு

(4) செய்து / செய்பு

**132.** பாடமைய அணுகுமுறையில் கற்றல் அனுபவங்கள் ________ ஐ ஒட்டி ஒழுங்கமைக்கப்படுகின்றன.

(1) ஆசிரியரின் பாடத்திறன்

(2) பாடப்பொருள்

(3) கல்வித்தொழில் நுட்பம்

(4) மாணவர்களின் ஆர்வம்

**133.** கணக்கீட்டுக்கான தகுமம் (Criteria of assessment) ஒரு

(1) வினாவாரியான மதிப்பெண் பங்கீடு

(2) மாணவரின் திறமையைப் பற்றிய பொதுவான எண்ணப்பதிவு (impressions)

(3) மதிப்பளவையிடலுக்கான கொளு (Scoring Key)

(4) மதிப்பீட்டு வழிகாட்டல்

**134.** ________ என்பன நாவின் நுணிப்பகுதி மேல் வாயின் (அண்ணம்) நுணியைப் பொருந்துவதால் பிறக்கும்.

(1) க, ங

(2) ச, ஞ

(3) த, ந

(4) ட, ண

**135.** படித்தலின் போதான சேகரித்தல் திறன் என்பது

(1) குறிப்பு தயார்செய்தல் (Note making)

(2) பொழிப்புரைத்தல் (Summarising)

(3) புரிந்துகொள்ளுதல் (Comprehension)

(4) குறிப்பு எடுத்தல் (Note taking)

***குறிப்பு :*** *கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியை நன்கு படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் (வினா எண் 136 – 141) தக்க விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

சயாம் (தாய்லாந்து) நாட்டு மன்னர், தன்னுடைய அரசவையினருள் எவரையேனும் தண்டிக்க விரும்பினால், அதற்கொரு புதிய வழியைக் கையாள்வார். தண்டிக்கப்பட வேண்டியவரை ஏழையாக்கி, வறுமையில் உழல விடுவதே அவ்வழி. அவ்வாறு ஏழ்மையுறச் செய்வதற்கும் அவர் ஒரு புது வழியையே பின்பற்றினார். தண்டிக்கப்பட வேண்டியவருக்கு ஒரு வெள்ளை யானையைக் கொடுத்து, பராமரித்து வருமாறு பணித்தலே அப்புதிய வழியாகும். "யானையைக் கட்டித் தீனி போடுதல்" குபேரனையும் குசேலனாக்கும் செயலாகும். மன்னரே அன்பளிப்பாகத் தரும்போது அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தலோ, தன்னோடு வைத்துப் பராமரிக்காமல் இருத்தலோ அரச குற்றமாகும். அது அக்காலக் குடிகள் எவர்க்கும் இயலாத செயலாகும். வெள்ளை யானையை அன்பளிப்பாகப் பெற்றவன் வளமை அற்று, வறுமை பெற்று, வேதனை உற்று முற்றுமாய் அழிவான் : மன்னனின் எண்ணம் ஈடேறும்.

**136.** இப்பத்தி எழுதப்பட்டுள்ளதன் நோக்கம்

(1) மன்னர்கள் பின்பற்றிய தண்டனை முறைகளை அறிவித்தல்

(2) 'வெள்ளையானை' என்ற மரபுத்தொடரின் தோற்றத்தை விளக்குதல்

(3) குபேரனுக்கும் குசேலனுக்கும் இடையிலான நட்பை விளக்குதல்

(4) யானைகளின் வகைகள் பற்றி விளக்குதல்

**137.** 'வளமை அற்று, வறுமை பெற்று, வேதனை அற்று முற்றுமாய் அழிவான்' என்ற தொடரில்

(1) 'மோனை' மட்டுமே பயின்று வருகிறது

(2) 'எதுகை' 'மோனை' இரண்டிற்குமான கூறுகளும் இல்லை

(3) 'எதுகை' 'மோனை' ஆகிய இரண்டு கூறுகளும் உள்ளன

(4) 'எதுகை' மட்டுமே பயின்றுவருகிறது

**138.** பின்வரும் கூற்றுகளுள் மிகவும் சரியானது

(1) அரசுப்பணியாளர்களைத் தண்டிக்க அரசர் வெள்ளையானையை வழங்குவார்

(2) செல்வந்தர்கள் பொழுது போக்குவதற்கு உதவ வெள்ளையானை வழங்கப்பட்டது

(3) எண்ணிக்கையில் மிகுந்துள்ள யானைகளைப் பராமரிக்க அவற்றை பலருக்கும் பரிசாக வழங்கினார்

(4) வறுமையில் வாடுவோர்க்கு உதவ அரசர் வெள்ளை யானையை வழங்கிகினார்

**139.** 'குபேரனையும் குசேலனாக்கும்' என்ற தொடரில் குபேரனையும் என்ற சொல்லில் உள்ள உம் என்னும் இடைச்சொல் ________ என்ற பொருளை உணர்த்த வந்துள்ளது.

(1) இழிவு சிறப்பு

(2) ஆக்கம்

(3) எதிர்மறை

(4) உயர்வு சிறப்பு

**140.** குபேரன் குசேலன் ஆகிய இருவரும் இங்கு குறிப்பிடக் காரணம்

(1) இருவருக்கும் உள்ள நட்பு

(2) செல்வநிலையில் இருவருக்கும் உள்ள பெருத்த வேறுபாடு

(3) குபேரனுக்கு குசேலர் யானை பரிசளித்த நிகழ்ச்சி

(4) இருவரும் யானைகள் மிகுந்த சேர நாட்டைச் சேர்ந்தவர்கள்

**141.** 'எவர்க்கும் இயலாத செயல்' எனக் குறிப்படப்படுவது

(1) குசேலனைப் போல யானைகளைப் பராமரித்தல்

(2) வெள்ளை யானையை வைத்துப் பராமரித்தல்

(3) பொதுவாக வெள்ளையாக இருக்கும் விலங்குகளைப் பராமரித்தல்

(4) குபேரனும் குசேலனும் போல நட்புடன் இருத்தல்

***குறிப்பு** : கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியை நன்கு படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் (வினா எண் 142 – 150) தக்க விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

தஞ்சை மாவட்டத்தில் திருநெல்லிக்கா என்னும் புகைவண்டி நிலையம் இருக்கிறது. அதற்கு ஐந்து கல் தொலைவில் திருக்கோளிலி என்னும் திருப்பதி இருக்கிறது. அதற்குத் திருக்குவளை என்னும் வேறு பெயரும் வழங்குகிறது, திருக்குவளைக்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் குண்டையூர் என்னும் இடம் இருக்கிறது. இதற்கு ரிஷபபுரி என்னும் பெயரும் வழங்கிவருகிறது. குண்டை என்னும் சொல்லுக்கு எருது என்பது பொருளாகும். குண்டையூரில் குண்டையூர்க் கிழார் என்னும் பெயரில் வேளாளர் ஒருவர் இருந்தார். அவர் வன்தொண்டரின் பெருமையைக் கேள்வியுற்றார். அவரை நேரே காணாவிடினும் அவர் மீது குண்டையூராருக்கு அளவிலா அன்பு ஏற்பட்டது. அதனால் அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு உணவுக்கு வேண்டிய நெல்லை அனுப்பி வந்தார்.

வருநாளில் மழைவளம் சுருங்கியதால் பரவையார் மாளிகைக்கு அனுப்புதற்கு வேண்டியநெல் கிடைக்கவில்லை. குண்டையூர்க் கிழார் மிகவும் வருத்தமுற்று தமது குறையை நினைத்துக் கொண்டே கண்துயின்றார்.

அவர் கனவில் சிவபெருமான் தோன்றி "ஆருரனுக்கு அளிக்க உனக்குப் போதிய நெல் அளித்தோம்" என்று கூறி மறைந்தார். இறைவர் ஆணைப்படி குபேரன் குண்டையூரின் எம்மருங்கும் மலைமலையாக நெல்லைக்குவியச் செய்தான். சிவபெருமான் வன்தொண்ட ருக்கு இதனை அறிவித்தார். நம்பியாரூரர் உடனே குண்டையூர் நோக்கிப்புறப்படடார். சிவபெருமான் திருவருளையும் வன்தொண்டர் மாளிகைக்கு நெல் அனுப்ப இயலாத தன் நிலையையும் வன்தொண்டருக்கு நேரில் தெரிவிக்கப் புறப்பட்ட குண்டையூர்க் கிழாரும் நம்பியாரூரரும் இடைவழியில் ஒருவரையொருவர் கண்டனர்.

இருவரும் திரும்பிக் குண்டையூருக்கே சென்றனர். ஆரூரர் அங்கு மலைகள் போலக் குவிக்கப் பெற்றிருந்த நெல்லைக் கண்ணுறுற்றார். சிவபெருமான் அருளால் ஆட்களைப் பெற்று இந்நெல்லை திருவாருருக்கு கொண்டு செல்லக் கருதி அருகில் இருந்த திருக்கோளிலி என்னும் பதியை அடைந்தார். அங்குள்ள சிவபெருமான் கோயிலுக்குள் நுழைந்து "நீள நினைந்தடி யேன் எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அதில்" ஆளிலை எம்பெருமான் ! அவை அட்டித் தரப்பணியே "என்று விண்ணப் பித்தார்."இன்று இரவு பூதகணங்கள் நெல்லைத் தூக்கிவரும்" என்று வானொலி பிறந்தது. அதுகேட்டு மகிழ்ந்த வன்தொண்டர் குண்டையூர்க்கிழாரிடம் விடை பெற்றுக் கொண்டு, திருவாரூரை அடைந்து இறைவரைத் தொழுதார். பிறகு இல்லம் சென்று நிகழ்ந்ததைப் பரவையாருக்குக் கூறி மகிழ்வித்தார் கீழேதரப்பட்டுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து உள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**142.** பின்வரும் கூற்றுகளுள் மிகவும் சரியானதைத் தெரிந்தெடுக்கவும்

(1) திருக்குவளையின் வேறுபெயர் திருக்கோளிலி

(2) திரு நெல்லிக்காவின் வேறுபெயர் குண்டையூர்

(3) திருவாரூரின் வேறுபெயர் திருநெல் லிக்கா

(4) திருக்கோளிலியின் வேறுபெயர் ரிஷபபுரி

**143.** பரவையார் மாளிகை _______ ல் உள்ளது.

(1) குண்டையூர்

(2) திருக்கூவளை

(3) ரிஷபபுரி

(4) திருவாரூர்

**144.** நம்பியாருரர் "நீள நினைந்தடியேன்" எனத் தொடங்கிடும் பதிகத்தைப் பாடிய ஊர் ________

(1) திருவாரூர்

(2) திருப்பதி

(3) திருக்கோளிலி

(4) திருக்குவளை

**145.** 'அளவிலா அன்பு' என்ற தொடரில் 'அளவிலா' என்ற சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு ______ ஆகும்.

(1) ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்

(2) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(3) அன்மொழித்தொகை

(4) கடைப்போலி

**146.** பின்வரும் கூற்றுகளுள் மிகவும் சரியானதைத் தெரிந்தெடுக்கவும்

(1) குண்டையூர்க்கிழார் நெல்வேண்டி குபேரனிடம் வேண்டினார்

(2) பரவையார் நெல்வேண்டி சிவபெருமானிடம் வேண்டினார்

(3) நம்பியாரூரர் நெல்வேண்டி சிவபெருமானிடம் வேண்டினார்

(4) குண்டையூர்க்கிழார் நெல்வேண்டி சிவபெருமானிடம் வேண்டினார்

**147.** 'மகிழவித்தார்' என்ற சொல் ______

(1) தன்வினை

(2) எச்சவினை

(3) துணை வினை

(4) பிறவினை

**148.** கொடுக்கப்பட்டுள்ள பத்தியில் எருது என்ற பொருள் தரும் சொற்களின் எண்ணிக்கை

(1) 3

(2) 2

(3) 1

(4) 4

**149.** 'புகைவண்டி' என்ற சொல்லுக்கு மிகவும் பொருள் பொருத்த முடைய சொல்

(1) மின்தொடர்

(2) தொடர்வண்டி

(3) இருப்புப்பாதை

(4) புகையிரதம்

**150.** நேரில் காணாமலே ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்திய வேறு இருவர்

(1) நலங்கிள்ளி, மோசிகீரனார்

(2) கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார்

(3) கணைக்கால் இரும்பொறை, அதியமான்

(4) நெடுஞ்செழியன், கோவூர்கிழார்

## SPACE FOR ROUGH WORK

**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :**

1. பக்கம் 2-இல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்பமை பந்துருள் முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்ட்ப்பட வேண்டும்.

2. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமன்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.

3. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

4. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

5. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.

6. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

7. தேர்வுக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.

8. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.

9. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.

10. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தைவிதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

11. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.

12. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**READ CAREFULLY THE FOLLOWING INSTRUCTIONS :**

1. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with Blue/Black Ball Point Pen on Side-2 of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
2. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
3. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
4. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
5. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
6. Each candidate must show on demand his / her Admission Card to the Invigilator.
7. No candidate, without special permission of the Superintendent or Invigilator, should leave his / her seat.
8. The candidates should not leave the Examination Hall without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet a second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case.
9. Use of Electronic / Manual Calculator is prohibited.
10. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
11. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
12. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Room / Hall. *The candidates are allowed to take away this Test Booklet with them.***

**निम्नलिखित निर्देश ध्यान से पढ़ें :**

1. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के पृष्ठ-2 पर केवल एक वृत्त को ही पूरी तरह नीले/काले बॉल पॉइन्ट पेन से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
2. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
3. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
4. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
5. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश कार्ड के सिवाय किसी प्रकार की पाठ्य सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
6. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-कार्ड दिखाएँ ।
7. अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
8. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा ।
9. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
10. परीक्षा-हॉल में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
11. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
12. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी कक्ष / हॉल छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । *परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।***

SEAL

# பகுதி IV
# மொழிப்பாடம் I
# தமிழ்

*குறிப்பு : கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து எழுதுக.*

**91.** பின்வருனவற்றுள் இருதிணைப் பொதுப்பெயர் எது ?

(1) யாவை

(2) ஒதுவார்

(3) யாம்

(4) பிறன்

**92.** "வெல்லம் உள்ளதா ?" என வாடிக்கையாளர் வணிகரிடம் கேட்கும் வினா

(1) ஏவல் வினா

(2) கொளல் வினா

(3) காலவினா

(4) கொடை வினா

**93.** யாம் முன்பு விளையாடுவது இச்சோலை என்ற தொடரில் காணப்படும் வழுவமைதி

(1) இட வழுவமைதி

(2) திணை வழுவமைதி

(3) கால வழுவமைதி

(4) பால் வழுவமைதி

**94.** "இளமதி நடைப்பயிற்சிக்கு வரவில்லையா ?" என்ற வினாவிற்கு "குளியலறையில் வழுக்கி விழுந்து விட்டேன்" என்று விடையளித்தல் _____ என்ற விடை வகையின் பாற் படும்.

(1) சுட்டு

(2) உற்றது உரைத்தல்

(3) மறை

(4) இனமொழி

**95.** பின்வரும் தொடர்களுள் பேசுபவருடன் முன்னிலை இடத்தாரையும் படர்க்கை இடத்தாரையும் உள்ளடக்கியது எது ?

(1) நாம் போகிறோம்

(2) நாங்கள் போகிறோம்

(3) யாம் போகிறோம்

(4) யானும் நீயும் போகிறோம்

**96.** வேற்றுமை உருவுகளை கற்கும்போது ஒருவர் கவனம் செலுத்து வேண்டியது, அவறின் _______ .

(1) பயன்பாட்டில்

(2) இலக்கண விளக்கங்களில்

(3) வரிசைமுறையில்

(4) எண்ணிக்கையில்

**97.** "அஞ்சலாள் அஞ்சல் உறைகளை காலை 11 மணிக்கு உரியவாகளிடம் ஒப்படைத்தார்."
"அஞ்சல் உறைகள் அஞ்சலாளால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன"
என்ற இருவாக்கியங்களை வேறுபடுத்திக் காட்ட மாணவர்கனின் கவனத்தை எதன்மிது ஈர்ககலாம்.

(1) சொறகளின் வைப்பு முறையல் உள்ள வேறுபாடு

(2) எழுவாய், செயர்படுபொருள் ஆகியவற்றின் பங்கு

(3) வினைச்சொல் வடிவத்தில் உள்ள மாற்றம்

(4) 'ஆல்' என்ற வேற்றுமை உருபின் பயன்பாடு